வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| அசல் மனு எண் | : | OS No.33/2014 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 12.07.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீதரன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

குறுக்கு விசாரணை ( 2வது பிரதிவாதிக்காக )

பாகப்பிரிவிணை கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு எதிராக புரோநோட் சம்பந்தமாக சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது முடிக்கப்பட்டுள்ளது. இந்த தாவா சொத்துக்கள் எனது தக்கபனார் ரங்கைய நாயுடுவிற்கு சொந்தமானது. எனது தகப்பனாருக்கு 6 மகன்கள் 1 மகள். எனது தாய் மற்றும் தகப்பனார் இறந்துவிட்டார்கள். இவர்கள் தான் வாரிசுதாரர்கள் என்பதை காண்பிக்க வாரிசு சான்றிதழ் வாதசாஆ 16 தாக்கல் செய்துள்ளேன். ராஜாராம் நாயுடு எனது தாய் மாமன். அவருக்கு வாரிசுகள் இல்லை. அவருக்கு இரண்டு மனைவிகள். இருவரும் காலமாகிவிட்டார்கள். நான் தான் மூத்த மகன் என்றால் சரிதான். 1936ல் நான் பிறந்தேன். நான் வருவாய் துறையில் மாவட்ட வருவாய் அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 1955 - 1956 பணியில் சேர்ந்தேன். ஜனவரி 1994ல் ஓய்வு பெற்றேன். நான் செங்கல்பட்டில் தாசில்தாரராக இருந்து பிறகு பதவி உயர்வில் நீல்கிரி மாவட்டத்திற்கு சென்றேன். மொத்தம் 6 செடியுள் சொத்துக்கள் எனது தாவாவில் காண்பித்துள்ளேன். அனைத்து சொத்துக்களும் எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். அது அவருடைய மூதாதையர் சொத்துக்கள் கிடையாது. தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் எனது தகப்பனாரின் சகோதரர்கள் பெயரில் வாங்கப்பட்டுள்ளன. அந்த

சொத்துக்களை எனது தகப்பனார் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் 1994ல் எழுதிவைத்துள்ளார். தாவா சொத்துக்களில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரில் வாங்கப்பட்டுள்ள சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )